O.S. 76/2022

சார்பு நீதிமன்றம், விருதுநகர்

நாள்:05.02.2025

DW1: அருணகிரி த/பெ– முருகன்

**சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

வழக்கின் 1ம் பிரதிவாதி எனது தகப்பனார். எனது தகப்பனார் எரிச்சநத்தத்தில் சரவணா டிபன் சென்டர் என்ற பெயரில் ஹோட்டல் தொழில் நடத்தி வந்தார். சரவணா டிபன் சென்டர் எனது பாட்டி மகாமாயி அம்மாள் அவருக்கு சொந்தமானது. சரவணா டிபன் சென்டர் எனது தகப்பனாருக்கு எப்படி பாத்தியப்பட்டது என்றால் எனது பாட்டியின் பூர்வீக சொத்தான அதை அவரை பராமரித்து வந்ததற்காக எனது தகப்பனாருக்கு ஒப்படைத்துவிட்டார். அதற்கான ஆவணம் எதுவும் எழுதி வைக்கவில்லை. எனது சித்தப்பா சுப்பிரமணியன் அந்த ஹோட்டலுக்கு அருகே வெத்தலை பாக்கு பெட்டிக் கடை நடத்தி வந்தார். எனது நிரூபண வாக்குமூலத்தில் அந்த வெத்தலை பாக்கு பெட்டிக்கடையை எனது சித்தப்பா எனக்கு 2008 ல் கொடுத்தார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதற்கு ஆவணம் எழுதி கொடுக்கவில்லை, ஆனால் அந்த பெட்டியை ஒப்படைத்துவிட்டார். எனக்கு 2015ல் திருமணம் நடைபெற்றது. திருமணத்திற்கு முன் நான் எனது தகப்பனார் மற்றும் எனது தம்பியுடன் வசித்து வந்தேன். நான் ஜவுளிக்கடை நடத்தி வந்த விபரத்தை எதிர்வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். ஜவுளிக்கடையை நான் 2011ல் இருந்து நடத்தி வருகிறேன். தாவா சொத்துக்கள் யாவும் எங்களது கூட்டுக்குடும்ப தொழிலான சரவணா டிபன் சென்டரில் இருந்து வந்த வருமானத்தை வைத்து எனது தந்தை பெயரிலும், எனது பெயரிலும்

கிரையம் வாங்கிய சொத்து என்பதால் தாவா சொத்தானது கூட்டுக்குடும்ப சொத்து என்றும், வாதிக்கும் இதர பிரதிவாதிகளுக்கும் பாகம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.